செ.வெ.எண்:442 12.6.08

<u>பத்திரிக்கை செய்தி</u>

தேசிய மாணவர் படையின் மூன்றாவது மாநில ஆலோசனைக் குழுக் கூட்டம் மாண்புமிகு திரு T.P.M. மைதின்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தமிழக அரசு அவர்களது தலைமையில் தலைமை செயலக கூட்ட அரங்கில் **12.6.2008** காலை நடைபெற்றது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அரசு செயலர், முனைவர் R.கிருத்துதாஸ் காந்தி, இ.ஆ.ப., தேசிய மாணவர் படை துணை தலைமை இயக்குநர் கமோடர் சிட்நாவிஸ், NM, தேசிய மாணவர் படை இயக்குநர், கர்னல் DP மாத்யுஸ், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் D விசுவநாதன், தமிழ் நாடு கால்நடை பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் P தங்கராசு மற்றும் பல்வேறு உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் குறித்தும் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9